# தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (நாரா நிறுவனம்)

# பதவி வெற்றிடங்கள்

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (நாரா நிறுவனம்) இலங்கையில் நீரியல் வளங்கள் தொடர்பிலான துறையில் ஆய்வு மற்றும் மேம்பாட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளும் பிரதான தேசிய நிறுவனமாகும்.

எமது நிறுவனம் கடல், கடற்கரை மற்றும் உள்ளக நீர் வளம் தொடர்பில் விஞ்ஞான ரீதியான சுற்றுச்சூழல், தொழில்நுட்ப அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் ஆலோசனை சேவை வழங்கி நீரியல் வளத்தை பாதுகாத்தல். பேண்தகு பயன்பாடு மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு முக்கிய பங்களிப்புச் செய்கிறது. அதேபோன்று கடற்றொழில் நீரியல் வள துறையின் அபிவிருத்திக்கு மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் நாரா நிறுவனம் பெரும் பங்களிப்பை பெற்றுத்தருகிறது.

நாரா நிறுவனம் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடமாக உள்ள பதவிக்காக குறித்த தகைமை மற்றும் அனுபவம் பெற்றவர்களுக்கு வாய்ப்பு திறந்துள்ளது.

| வரிசை இலக்கம் | பதவி | சேவைத் தரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | முதன்மை விஞ்ஞானி (சமுத்திர விஞ்ஞானம்) | HM 1-3 | 01 |
| 02 | முதன்மை விஞ்ஞானி (பின் அறுவடைத் தொழில்நுட்பம்) | HM 1-3 | 01 |
| 03 | முதன்மை விஞ்ஞானி (மீன் தயாரிப்பு) | HM 1-3 | 01 |
| 04 | சிரேஷ்ட விஞ்ஞானி (உள்ளக நீர் வள மற்றும் நீரியல் வளர்ப்புப் பிரிவு) | AR-2 | 01 |
| 05 | சிரேஷ்ட விஞ்ஞானி (சமுத்திர விஞ்ஞானப் பிரிவு) | AR-2 | 01 |
| 06 | சிரேஷ்ட விஞ்ஞானி (பின் அறுவடைத் தொழில்நுட்பப் பிரிவு) | AR-2 | 01 |
| 07 | உள்ளக கணக்காய்வாளர் | MM 1-2 | 01 |
| 08 | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | MM 1-2 | 01 |
| 09 | தரவுப் பகுப்பாய்வாளர் | MM 1-2 | 01 |
| 10 | விஞ்ஞானி (உள்ளக நீர் வள மற்றும் நீரியல் வளர்ப்புப் பிரிவு) | AR-1 | 02 |
| 11 | விஞ்ஞானி (சமூக, பொருளாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு) | AR-1 | 01 |
| 12 | விஞ்ஞானி (சமுத்திர உயிர் விஞ்ஞானப் பிரிவு) | AR-1 | 02 |
| 13 | விஞ்ஞானி (கடற்றொழில் தொழில்நுட்பப் பிரிவு) | AR - 1 | 01 |
| 14 | விஞ்ஞானி (சுற்றுச்சூழல் ஆய்வு பிரிவு) | AR-1 | 02 |
| 15 | உதவித் தகவல் தொழில்நுட்ப அதிகாரி | JM 1-2 | 01 |
| 16 | உள்ளக கணக்காய்வு அதிகாரி | JM 1-2 | 01 |
| 17 | உதவித் திட்ட ஆய்வு அதிகாரி | JM 1-2 | 01 |
| 18 | தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) | JM 1-2 | 01 |
| 19 | சுழியோடி அதிகாரி | JM 1-2 | 01 |
| 20 | நிலத்தோற்ற அதிகாரி | JM 1-2 | 01 |
| 21 | தொழில்நுட்ப உதவியாளர் (மின்) | MA 2-2 | 01 |
| 22 | ஆய்வு உதவியாளர் | MA 2-2 | 10 |
| 23 | துறை ஆய்வு உதவியாளர் | MA 2-2 | 04 |
| 24 | எஞ்சின் அறை தொழிநுட்ப வினைஞர் | MA 2-2 | 01 |
| 25 | சுழியோடி | MA 2-2 | 01 |
| 26 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது) | MA1-2 | 03 |
| 27 | மின் வினைஞர் | PL -3 | 01 |
| 28 | படகு இயக்குநர் | PL -3 | 01 |
| 29 | மோட்டார் தொழில்நுட்பவியலாளர் | PL -3 | 01 |
| 30 | ஆய்வுகூட உதவியாளர் | PL -2 | 04 |

மேலுள்ள பதவிகளுக்காக தேவையான தகைமை மற்றும் வேறு விபரங்களை தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிறுவனத்தின் இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் (www.nara.ac.lk). விண்ணப்பங்களை ஒன்லைன் முறை (online application portal) ஊடாக மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் www.nara.ac.lk என்ற இணையதளத்தின் vacancies இற்கு பிரவேசித்தல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் ஒன்லைன் முறையின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதிகளை தரவிறக்கம் செய்து (Download) வன் பிரதியில் தாம் கையொப்பம் இட்டு அத்துடன் அடிப்படை கல்வி மற்றும் தொழில் தகைமையை உறுதி செய்கின்ற சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்றுடன் 2026 ஏப்ரல் 06 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் பணிப்பாளர் நாயகம், தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை, காக்கை தீவு, மட்டக்குளி, கொழும்பு 15 என்ற முகவரிக்கு அனுப்புவதற்கு வகை செய்தல் வேண்டும். விண்ணபிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்களின் உச்ச கல்வித் தரம் மற்றும் அனுபவம் அடிப்படையில் குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் மற்றும்/ அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபை ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு அந்த சோதனையில் காண்பிக்கும் திறமை அடிப்படையில் பதவிக்காக தேர்வு செய்யப்படும். நியமன அதிகாரியினால் நியமிப்பதற்கு போட்டிப் பரீட்சை ஒன்று தேவை என தீர்மானிக்கப்பட்டால் அதற்காக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த நீங்கள் கடப்பாடு பெற்றுள்ளீர்கள்.

அரச சட்டரீதியான சபைகள், கூட்டுத்தாபனங்கள் அல்லது திணைக்களங்களின் விண்ணப்பதாரர்களினால் தரவிறக்கம் செய்யப்பட்ட தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத் தலைவர் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, நிறுவனத் தலைவர் மூலம் அனுப்பாத, தாமதித்துக் கிடைக்கின்ற, முழுமை பெறாத, தெளிவற்ற அல்லது வேறு ஏதேனும் தேவை ஒன்றை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை**
**காக்கை தீவு,**
**மட்டக்குளி,**
**கொழும்பு 15**
**011 – 2521000 / 2521006**
**(www.nara.ac.lk)**